IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 341/2019 P.W. 6/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. உமா மகேஷ்வரி | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.11.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் சமூக நலத்துறையில் பணிபுரிந்து தற்சமயம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்னர் நான் கன்னியாகுமரி மாவட்ட சமூக நலத்துறை பொறுப்பு அலுவலராக பணிபுரிந்த பொழுது 3159/A3/2014 என்ற அறிவிப்பின் மூலம் எனக்கு விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வந்த வேண்டுகோளின் அடிப்படையில் 12.02.2015ம் தேதி மனுதாரர் சசிரேகா என்பவரையும் எதிர்மனுதாரரின் சகோதரியான சுஜாதா, க/பெ. சதீஷ் என்பவரையும் எதிர்மனுதாரர் அம்மா சரஸ்வதி ஆகியோர்களை விசாரணை செய்தேன். அதே போல் அவர்கள் மூவரையும் 05.03.2015ம் தேதியும் விசாரணை செய்தேன்.

2. எதிர்மனுதாரரும் மனுதாரரின் கணவருமான பிரகாஷ் என்பவரை 04.05.2015ம் தேதி அன்று விசாரணை செய்தேன். எனது விசாரணையில் பொழுது மனுதாரர் ஏற்கனவே இம்ரான் கான், த/பெ. மைதின் கான், இரவிபுத்தூர்கடை என்பவரை முஸ்லீன் முறைப்படி திருமணம் செய்து மனுதாரரின் பெயரை ரஜபுநிஷா என பெயர் மாற்றம் செய்து 16.07.2006 முதல் 27.05.2011 வரை கணவன் மனைவியாக வாழ்ந்ததாகவும் அதன்பிறகு கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் பிரிந்து விட்டார்கள் என்பதும் தெரியவந்தது.

3. மேலும் அவர்கள் பிரிந்த பொழுது அவர்கள் இருவரும் சேர்ந்து திருமண இரத்து பத்திரத்தில் கையெழுத்து செய்ததும் தெரியவந்தது. 15.04.2013 அன்று இரண்டாவதாக எதிர்மனுதாரர் பிரகாஷ் என்பவரை இந்து முறைப்படி திருமணம் செய்துக் கொண்டார் என்பது எனது விசாரணையில் தெரியவந்தது. மனுதாரர் சசிரேகா என்பவர் எதிர்மனுதாரரின் சொத்துக்களை அவரது பெயருக்கு மாற்றித் தரக்கோரி பிரச்சனை நடந்தது என்பது எனது விசாரணையில் தெரிய வந்தது.

4. மேலும் எதிர்மனுதாரர் பிரகாஷ்–டம் உள்ள 20 பவுண் நகை மற்றும் 3 லட்சம் மதிப்பிலான வீட்டு உபயோக பொருட்களை வாங்கிக் கொடுக்குமாறு மனுதாரர் வாக்குமூலத்தில் என்னிடம் கூறினார். இரு தரப்பினரையும் நான் விசாரணை செய்து எனது விசாரணை அறிக்கையை நான் அனைத்து மகளிர் காவல்நிலையம், குளச்சல் காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி **அறிக்கையானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

1. என்னிடம் காட்டப்படும் பிரகாஷ் என்பவரின் வாக்குமூலமானது எனது விசாரணையில் பொழுது 04.05.2015 அன்று எதிர்மனுதாரர் பிரகாஷ் என்பவர் கொடுத்த வாக்குமூலம் என்றால், சரிதான். மேற்படி **ஆவணத்தின் சான்றிட்ட நகல் Ex.D1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. எனது விசாரணையின் பொழுது சட்டமுறைப்படி அவர்கள் விவாகரத்து பெற்றதாக தெரியவருகிறதா என்றால், அவர்கள் 27.05.2011–ம் தேதியன்று நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் திருமண ரத்து பத்திரம் தயார் செய்து கையொப்பம் செய்துள்ளார்கள் என்று தெரியவருகிறது. மேற்படி ரத்து பத்திரத்தின் அடிப்படையில் இம்ரான்கான் மனுதாரருக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் கொடுத்துள்ளார் என்றால், சரிதான்.

3. மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் அவர்கள் சட்ட முறைப்படி விவாகரத்து பெற்றார்களா என்றால், இல்லை. மனுதாரர் எனது விசாரணையின் பொழுது எதிர்மனுதாரர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கவில்லை என்றால், சரிதான். மனுதாரர் கோரியுள்ள நகைகள் மற்றும் பொருட்களை 1–ம் எதிர்மனுதாரர் வசம் இருப்பின் அவற்றை மனுதாரருக்கு மீட்டுக் கொடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

4. நான் அனுப்பிய அறிக்கையில் குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். 26.02.2015ம் தேதியன்று எனக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால், சரிதான். மேற்படி **வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் Ex.D2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. நான் மனுதாரருக்கு ஆதரவாக நான் எனது விசாரணை அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்திருந்தால் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்காது என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.